1970 மார்ச் 17]

(இ) & (உ) 1967-ஆம் ஆண்டில் முதன் முதலாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்று தொடங்கப் பட்டது. 1969-70-ஆம் ஆண்டில் மேலும் வேலூர், கடலூர், சேலம், கோயம் புத்தூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து ஊர்களிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அண்மையில் ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

* 412 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியாகச் சித்த முறையில் பயிற்சி பெற்றோருக்கு அரசாங்கம் தேர்வு நடத்திப் பதிவு வழங்குவதை எவ்வளவு காலத்திற்கு நீட்டித்துள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1—9—1967-ல் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது.

* 413 வினா.—**புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்கப் பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் எத்தனை எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் தற்சமயம் தமிழகத்தில் எங்கும் இல்லை.

* 414 வினா.—**திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை அரசு எந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்னை அரும்பாக்கத்தில் உள்ள இந்திய மருத்துவ மனையிலும் நகராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங் களாலும் நடத்தப்படும் இந்திய மருத்துவ மனைகளிலும், மாவட்ட மருத்துவ மனைகளில் தொடங்கப்படும் சித்த மருத்துவப் பிரிவுகளிலும் மருத்துவர்களாக நியமிக்கப்படுவர். பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் போதனை ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சித்த வைத்திய அதாவது நாட்டு வைத்திய முறைக்கு மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கித் தருகிறது? அந்த நிதி சரிவா பயன்படுத்தப் படுகிறதா என்பதை அறியவிழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுவரை சித்த வைத்திய முறைக்கு மத்திய அரசு பணம் தந்ததாகத் தகவல் இல்லை. தமிழக அரசே தன் நிதியில் இருந்து இதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றன.